# செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 சூலை 2001 பகுதி : 7

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டா. ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

**திங்கள் இதழ்**

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. தருமபுர ஆதீனப் பன்னிரு திருமுறை
வெளியீடு - ஓர் ஆய்வு
வித்துவான் தா. குருசாமி தேசிகர்..... 225

2. திருமுருகன் திருக்காவடி.
புலவர் சி. பாண்டுர ்கன் ..... 232

3. ஈவோரும் ஏற்போரும்
பேராசிரியர் ந. சுப்ப்ரமணியன்..... 238

4. நற்றிணையில் கபிலர் பாடல்கள்
(ஆங்கில மொழிபெயர்ப்பு)
டாக்டர். அ. தட்சிணாமூர்த்தி ..... 242

5. மக்களாட்சி வளர்ந்த வரலாறு
பா. சூரியநாராயணன் ..... 246

# தருமபுர ஆதீனப் பன்னிரு திருமுறை வெளியீடு - ஒரு பார்வை!

*வித்துவான் தா.குருசாமி தேசிகர்*

முன்னுரை :

தமிழர் பண்பாட்டில் பன்னிருதலமுறைகளின் தாக்கம் பெரிதாகும். 'தெருவெலாம் தமிழ் முழக்கம் செய்யவாரீர்' என்று பாரதியார் பாடியதும், 'தெற்கோதும் தேவாரம்' என்று பாரதிதாசனார் பாடியதும் அதனால் தான். இத்திருமுறைகளின் குடியிருப்புகள் கோயில்களாயின. "இறைவன் இருப்பல்லாத இடங்களில் இசை அரங்கேறினாலும், திருமுறைகள் பாங்கறிந்தே ஓத வேண்டும்; இத்திமுறைகள் பண் சுமந்த பாடல்களாகவும் விளங்கிச் சங்கப்பாடல்களின் வலிமையையும், கருத்துக்களையும் பெற்றுக் கூடுதலான மெய்யுணர்வுக் கொள்கைகள் தமிழ் நாட்டில் கால்கொள்ள வாய்ப்பாயின"—என்று இத்திருமுறை ஆய்வில் தம் வாணாளைக் கழித்த, டாக்டர் தா.ஐ. ஏசுதாஸ் கூறுவர். மேலும், கீழ்க்கண்டவாறு தேவாரப் பாடல்களைப் புகழ்கிறார். *

## தேவாரச் சிறப்பு :

"இத்தேவாரப்பாடல்கள், பல உயர்ந்த உணர்ச்சிகளை உண்டாக்குவன; உள்ளத்தை உருக்குவன; உள்ளத்தைக் கொள்ளை கொள்வன; வஞ்ச நெஞ்சத்தைப் பஞ்சாக்குவன; பாடும் போதே கண்ணீர் பெருகும். மெய் சிலிர்க்கும். உள்ளமும் உயிரும் இனிக்கும். இப்படிப்பட்ட பாக்கள் வைச சமயத்திற்கே தனிச் சிறப்பாகும். இதனை உலக அறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்"+ என்று தமிழில் எழுதிய கருத்துக்கள் தேவாரப் பாடலின் சிறப்பை உணர்த்தும்.

---

* The Religious Experience of Saiva Siddhanta - English - Samaya Acharya - Saiva Samayam - Page 17

+ தருமையாதீன வெளியீடு — சைவ சமயம், பக்கம் 10

## ஆய்வாளர் முடிவு:

திருமுறையை முதலில் ஆய்ந்தவர் நம்பியாண்டார் நம்பிகள். இத்திருமுறையைப் பதிகப் பெருவழி என்று அடையாளங் காட்டினார். "யாதும் ஊரே யாவருங்கேளிர்" என்ற புறநானூறு வரி திருமுறையால் விளக்கம் பெற்றன.

திருமுறையில் யாழ்முறிப்பண்ணையும் 'யாழ்'கருவியையும் தற்காலத்தில் ஆராய்ந்த அறிஞர் * திருஞானசம்பந்தரைக் கர்நாடக சங்கீதத்தின் 'பிதா' என்றும், அவரே கமகத்தை இசைத் துறையில் முதன் முதல் புகுத்தியவர் என்றும் வெளிப்படுத்தியுள்ளார். இசைக்கு 'கமகம்' உயிர்நாடியானதற்குக் காரணம் திருஞானசம்பந்தரின் 'யாழ்முறிப்பதிகம் காரணம் என்பதை அறியோமே தவிர, 'யாழ்' தமிழ் நாட்டை விட்டு மறைந்த காரணத்தை நாமறியவில்லை. யாழ் விட்டிசைப்பது; என்ற செய்தியை ஆய்வு செய்து முடிவு கூறிய பி.டி.ஆர்.கமலைத் தியாகராஜனுக்குத்+ தமிழ் வரலாற்றுத்துறை நன்றி பாராட்ட வேண்டும்.

## சங்கராச்சாரியார் பாராட்டு :

திருஞானசம்பந்தர் வாழ்வும் வாக்கும், திருவள்ளுவரின் 'கற்றதனாலய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்ற குறளுக்கு இலக்கியமாயின.தருமையாதீன நிறுவனர் குருஞானசம்பந்தர் 'திருமுறைகளை ஓதுக' என்று ஆணையிட்டபடி ஆதீனப் பழக்க வழக்கங்கள் –மரபு–சம்பிரதாயம் என்பன திருமுறைவழியே நிகழ்கின்றன. தமிழ் வளர்க்கும் தருமபுர ஆதீனம் நெறியில் நின்று தமிழ் மக்களுக்கு நன்னடை நல்கி வருகிறது என்று மறைந்த ராஜகுமார் காசிநாதத்துரை ஒரு

* P.T.R.Kamalai Thiagarajan Isai Tamilin Unmai Varalaru - P.10

+ தருமபுர ஆதினம் இவருக்கு 'இயலிசை வித்தகர்' பட்டம் வழங்கியுள்ளது விழாவில் கூறியபடி, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி பரிபூரணம் அடைந்தவர்கள் அதனைவழி மொழிந்து, தருமையாதீனத்

தேவார உரையைப் பாராட்டிய செய்தி நினைவு கூரத்தக்கது. அச்செய்தி 1954–ல் வெளியிட்ட தேவாரப் பதிப்பில் உள்ளது அச்செய்தி வருமாறு:

"திருமுறைகளில் ஒன்றையாவது தன் நாவினால் நவிலாத தமிழன் தமிழுலகில் இரான். அவைகளின் பொருளைஅறிய வேண்டும் அவா, இவ்வெளியீட்டால் நன்மைகிட்டும். சமயக் கல்வி குன்றிவரும் இக்காலத்துச் சூழ்நிலையில் நமது இளைஞர்கட்குத் தேவார உரை ஒரு விருந்து. சரிதக் குறிப்புகளுடன் தலமான் மியங்களுடன் ஆராய்ச்சிக்குறிப்புகளும் பொருந்த தருமையா தீனத்தினின்று வெளிவரும் திருமுறைப் பதிப்பை மனமார வாழ்த்துகிறோம்" இக்காலத்தில் எழுந்தருளியுள்ள பெரியவர்கள் சீர்காழியில் திருஞானசம்பந்தர் அவதாரம் செய்த இல்லத்தை விலைக்கு வாங்கி, தேவாரம் கற்கவும் எற்பாடு செய்துள்ள செய்தி அறியத்தக்கதாகும்.

## வெளியீட்டாளர் சிறப்பு :

பன்னிரு திருமுறைகளில் முன்பு குறிப்புரையே மிகுதி. தற்போது முற்றிலும் உரையுடன் பெரும்பகுதி வந்துள்ளன. உரையாசிரியர்கள் தமிழ்ப்புலமையில் வீறு பெற்றவர்கள். தேவாரத்திற்குப் பல உரைகள் தோன்றுதற்கும் தருமை ஆதீன முந்திய பதிப்புகளே தாயாக விளங்குவன. இப்போது பெரிய புராணத்துக்கும் உரை எழுதப்பட்டு அனைத்து வெளியீடுகளையும் நிறைவேற்றி, தில்லையில் (வெளியிடும்) விழா நிகழ்த்த ஆதீனத்திருவுள்ளக்கருத்தாகும். இப்போது தருமபுர ஆதீனத்தின் ஞானபீடத்தில் எழுந்தருளியிருப்பவர்கள் முறையான திருமுறைப் பயிற்சியும், இசைநலமும் அறியப் பெற்றவர்கள். தமிழிலும் திருமுறையிலும் ஆழ்ந்து தெரிந்த மெய்ஞ்ஞானமும் வாய்த்தவர்கள். சைவசமய உண்மைகளை அனைவரும் அறிய அனைத்துலகச் சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம் அமைத்து, பல ஆங்கில நூல்களை வழங்கச் செய்துள்ளார்கள். ஒழுக்கங்களையும் மக்களுக்கு அறிவுறுத்தி அவர்களை நன்னெறிப்படுத்தும் பணியிலும் முயன்று

வருகிறார்கள். கி.பி. 16ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட தருமபுர ஆதீனம் வேலூர், சீர்காழி, திருக்கடவூர் முதலிய கோயில்களைப் பரிபாலிப்பதோடு கல்லூரி, சமூகப்பணி முதலியவற்றிலும் இவ்வாதீனம் தொண்டு செய்து வருகிறது.

## வியக்கத்தக்கது :

தருமபுர ஆதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரியராகிய இவர்கள் மடாலய பரிபாலனத்துடன், திருநாவுக்கரசர் அவதரித்த திருவாமூரில் 'நினைவாலயம்' அமைத்தும். தேவாரக் கல்லூரி நிறுவியும், தொலை நோக்கோடு அவர்கள் மெய்ப்பணி செய்து வருவது வியக்கத்தக்கது. ஒரு நாளும் ஒழியாமல் ஆதீனத்தை விட்டுப்பிரியாமல்,. ஆன்மார்த்த பூசை செய்து காலையும், மாலையும் தவறாமல் திருக்கோயில் வழிபாடு செய்து, தவம் பெருக்கி வருகிறார்கள். அவ்வருளாளரின் செயல் திறன்கள் விளம்பரத்திற்கு வராதவை. ஆட்சியாளர்க்கும் வியப்பை நல்கி, மெய்மையில் நிற்க உதவி வருகிறார்கள். இவர்கள் ஞானச் செங்கோல் செலுத்தும் நாளையில்தான் பன்னிருதிருமுறை முற்றிலும் உரையுடன் வெளியிடப்படுகிறது. இவர்கள் புரவலர் மட்டுமல்லர் ; புலவர்; புலவர் மட்டுமல்லர். ஆய்வாளர், ஆய்வாளர் மட்டுமல்லர், சிந்தனையாளர், சிந்தனையாளர் மட்டுமல்லர், தொல்லாணை நல்லாசிரியர். இவர்களின் ஆய்வுச் செய்திகள் ஆசியுரையாகப் பன்னிருதிருமுறையிலும் மிளிர்கின்றன. உரையாசிரியர்கள் திறனைப் பின்பு சிந்திக்கலாம். முதல் திருமுறையில் தருமையாதீனக் குருமார்களின் திறனை – ஆய்வினை வரிசைப்படுத்தலாம். அவற்றுள் சில.

1. திருஞானசம்பந்தர் முதலில் பாடியது 'தோடுடைய செவியன்' இரண்டாவது பாடியது 'நறவம் நிறைவண்டு' என்ற தக்கேசிப்பண். இரண்டாவது 'தாளம் பெற்றது' என்று பலரும் கருதுவதைத் தவறு எனக் காட்டினார்கள் – இது ஓர் சிறந்த ஆய்வு.

2. 'உண்மை நிலை' – சொரூபநிலை எனப்படும். இறைவன் ஒருவனே. அவன் தன்மையால் இருதிறப்படுவான். 'தோடுடைய செவியன்' என்பது தோட்டையுடைய 'செவி' அம்மைக்குரியது. இப்படி இருதன்மையோடு கூடிய ஒருருவாகவே இறைவனைக் கண்டார்; காட்டினார்' என்பது ஒரு செய்தி.

3. சிறப்பு நிலை – தடத்தநிலை எனப்படும். இறைவன் தன்னை நோக்க ஒன்றாயும், உலகமுகப்படும்போது பலவாயும் பயன்படுகிறது. தயாமூலதன்மம் என்னும் தத்துவப்படி நோக்க (பராசக்தி) அவற்றில் ஒருகூறு – அயன், அரி,. அரன் என்றும் படைத்து முத்தொழிலைச் செய்விக்கிறது. இதுவே தடத்தநிலை. இதனை ஞானசம்பந்தர் 'ஒருவன் முதல் பூதலம் படைத்தளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை' என்றார் – என்ற மற்றோர் ஆய்வு எண்ணத்தக்கது.

4. சம்பு பட்சமும் – அணுபட்சமும் :

சம்பு – இறைவன் இன்பத்தின் ஊற்றுக் கண்ணாய் இருப்பவர். அயன், அரி, அரன் மூவரும் இறைவனுடைய சக்தியே ஆவர். இது சம்பு பட்சம். இறைவனே அயன், அரி, அரன் ஆன நிலை புண்ணியச் செயற்பாட்டால் உயர்ந்து சில உயிர்கள் இப்பதவியைப் பெறும். இவ்வான்மாக்கள் அணுபட்சத்தினர். இது உயிர்வருக்கம்.

ஆணவமலமறைப்பால் வியாபகம் இன்றி அணுத்தன்மை எய்தியிருப்பதால் உயிர் அணு எனப்பட்டது. அரன் அன்று முதல் இன்று வரை தானே பிரமம் என்று கருதியவர் அல்லர். அதனாலேயே அரனே சிவம் எனப்பட்டார். 'இவ்விரு அரியும் அயனும் கூட ஒரு கற்பத்திலேதான் இவ்வாறு தருக்குற்றார்' என்பது மற்றொரு சிந்தனை.

5. திரு– என்ற சொல். திருமுறை–திருத்தலங்கள் – பலவற்றுக்கும் அடைமொழியாகியது. சங்க காலத்தில்

வெறுமனே 'ஆவூர்' என்றிருந்தது சமயமலர்ச்சிக் காலத்தே 'திருவாமூர்' ஆனது. ஏன்? 'திரு' என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்ற காரணமேயாகும். குழந்தை, யானை என்பனவற்றை எத்துணைப் பெரியவர்களாயினும் சிறியவர்களாயினும் காணுந்தோறும் விருப்பம் கொள்வர். அதுபோல சத்து சித்து ஆனந்தமாக இருக்கும் பரம்பொருளையும், துன்புறுவோர், இன்புறுவோர், யாவராயினும் நினைய, காண, பேச விருப்புற்றிருப்பதேயன்றி வெறுப்புற்று இருப்பாரல்லர் – என்ற விளக்கம் ஒருபால் உள்ளது.

6. சோழர் மூவர் திருமுறைப்பணி : நம்பியாண்டார் நம்பிகள் ஆதித்த சோழன், இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய மூவர் காலத்திலும் வாழ்ந்தவர் என்று குடந்தை ந.சேதுராமன் கூறியதே பொருந்தும். இரண்டாங்குலோத்துங்கன் காலம் முடிய பன்னிரு திருமு றைத் தொகுப்பு நிறைவு பெற்றது. நம்பியாண்டார் நம்பிகளே திருமுறைகளைத் தொகுத்தவர். வேத வியாசருக்கு ஒப்பாகப் போற்றப்படுபவர் என்ற வரலாற்று முடிவு காட்டுதல் அரிய சிந்தனை!

7. ஆச்சாரியத்துவம் : முதலில் தேவாரம் பாடியவர் என்ற சிறப்பு திருநாவுக்கரசர்க்குரியது. இவர் மகேந்திரன் காலத்தவர். கி.பி. 642இல் ஆண்ட பல்லவமன்னன் நரசிம்மவர்மன் காலத்திலே அவதாரம் செய்த திருஞான சம்பந்தர் காலத்தில் பிந்தியிருந்தாலும், ஆச்சாரியத்துவம் இவருக்கே வழங்கப்பட்டது என்ற குருமார்களின் ஆசிரியவசனம் போற்றத்தக்கது.

8. திருஞானசம்பந்தர் முதல்வரானதற்குரிய காரணங்கள் : அவர் இறைவன் விடையேறியதைக் கண்டு பாடியவர்: அக்காட்சி தந்தைக்கும் புலப்பட்டிலது. திருவாய்மூரில் திருஞான சம்பந்தர் காட்டக் கண்ட அப்பரடிகள் பின்பு கண்டு பரவிப்பாடினார். ஞான சம்பந்தரின் மூல இலக்கியங்கள்

அடங்கிய புத்தகங்கள் மற்றொரு காரணம். அவதாரச் சிறப்பு பதினாறு வகை என்பர் சேக்கிழார். குடை, திருச்சின்னம், சிவிகை, முத்து விதானம் போன்ற ஆச்சாரியருக்குரிய அங்கங்கள் எல்லாம் ஞானசம்பந்தருக்கே கொடுத்தமை ஆகியவற்றாலும் முத்திப்பேறு எய்திய ஆச்சாள்புரம் 'ஆச்சாரியபுரம்' என்று வழங்கிவரல் முதலியவையும் காரணங்களாகும் என்ற முடிவு காணத்தக்கது.

9. முதல் திருமுறையின் முடிவுப்பதிகம் 'மாதர் மடப்பிடியும்' என்ற தருமபுரப் பதிகம். இது திருமுறையின் பலன் சொல்வது போல முடித்திருப்பது திருவருட் பொருத்தமாகும். இறைவரின் *பிணை, துணை, கழல்களை* விரும்பிப் போற்றுபவர், 'நெடுநன்னுலகு எய்துவர்' என்றதனால் வீடுபேறு அடைவர் என்கிறார்; இது 'இன்ப ஆக்கம்; இடர் பிணி துயர் 'அணைவிலர்' என்றதனால் 'துன்ப நீக்கம்' குறித்தாராயிற்று என்ற முடிவும் வணங்கிப் போற்றத்தக்கது.

## முடிவுரை:

இப்படிப்பட்ட ஆய்வுரைகள் ஆசியுரைகள் கொண்டு பன்னிருதிருமுறைகளிலும் பொதுளி விளங்குகின்றன. ஆராய்ந்தறிந்த செய்திகள் அனைத்தும் திருமுறையை ஓதிட விழைவைத் தோற்றுவிக்கும். செல்வம் – செல்வாக்கு – அதிகாரம் இவற்றால் பெறும் இன்பத்தை விட, மூவர் தேவாரத்தை இசையோடு பாடிக் கேட்கும் இன்பமே மெய்மையானது என்று ஓர் அரசர் * எண்ணிய எண்ணத்தை நினைவு கூர்ந்து. திருமுறைப்பணியில் தன்னிகரற்று விளங்கும் தருமையாதீனத்தைப் போற்றிப் பரவுவோமாக!

---

* ஐயடிகள் காடவர்கோன் –11ம் திருமுறை

# திருமுருகன் திருக்காவடி

- புலவர் சி.. பாண்டுரங்கன்

ஆடித்திங்கள் கிருத்திகை நன்னாளில், பல இலட்சக்கணக்கில் முருகபக்தர்கள், காவடி தாங்கிச்செல்கின்றனர். முருகனைத்தரிசனம் செய்து, வழிபடுகின்றனர். திருத்தணிகை போன்ற ஆறுபடை வீடுகளும், மற்றுமுள்ள முருகன் கோவில் கொண்ட தலங்களும் விழாக்கோலம் கொள்கின்றன. விரதம் இருந்து, துவர் ஆடை புனைந்து, பக்தி மேலோங்க, சந்தம் மிக்க திருக்காவடிப் பாடலை இன்னிசை முழங்கப் பாடிவரும் அடியவர்கள் முருகன் அருள்பெற்றுத் திரும்புகின்றனர்.

காவடித்தத்துவம், முருகக்கடவுளின் பிறப்பு பற்றிய கதை, அது உணர்த்தும் தத்துவம், முருகன் திருவுருவம் உணர்த்தும் தத்துவம், முருகன் உறையும் இடங்கள், ஆறுபடை வீடு, திருநாமங்கள், திருவிளையாடல்கள், வழிபாடு ஆகியவை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## காவடி

“ஆறுமா முகப்பிரான் அடிகள் போற்றுவாம்” எனவும், “அறுமுகன் அடிகள் ஏத்துவாம்” எனவும், “செவ்வேள் மலரடி போற்றி”எனவும், கந்தபுராணம் முருகர் திருவடியைப் போற்றுகிறது. தாமரை போன்ற திருவடிகளைக் குறிப்பிட்டு, பெருந்தேவனார் பாடல் தொடங்குகிறது. திருவடிகளை வழிபாடு செய்வது அடியவர்க்கு மிக்க விருப்பம் தருவது, சிவபுராணம் முதலிய பாடல்களாலும் இதனை நாம் அறியலாம்.

காவடி தாங்கிச் செல்லுதல், திருவடி வணக்கமன்றி வேறில்லை. கா, அடி என்னும் சொற்களே, காவடி ஆகும். இது, காக்கின்ற திருவடிகள் என்னும் பொருளை உடையது. தம் மனநிறைவுக்காக, இறைவனின் திருவடிகள் எனப் பாவனை செய்து கொண்டு, காவடியைத் தோளில் சுமந்து செல்கின்றனர் அடியவர்கள். அதனால்தான், தாம் அதனைத் தோளில் ஏற்றதுமுதல், திருக்கோவிலில் சார்த்தும்வரை, இடையில்

வேறெங்கும் தரையில் வைப்பதில்லை. அவர்கள் நடந்து செல்லும் பொழுது நடைப்பயணத்திற்கு ஏற்ற மெட்டுகளில் இசைப்பாடல் பாடிச்செல்கின்றனர்.

*"பச்சைத்திருமயில் வீரன்*
*அலங்காரன் கௌமாரன் - ஒளிர்*
*பன்னிரு திண்புயப் பாரன் ....."*

- மகாகவி பாரதியார்

காவடிப் பாடல்களாக அருமையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அடியவர்கள், காவி ஆடைகளையே அணிந்து செல்வது கவனிக்கத்தக்கது. ஏழை - பணக்காரன், மேலோன் - கீழோன் என்னும் வேறுபாடுகள் இன்றி, இறைவன் முன்னிலையில் அனைவரும் சமமே என்பதை இது உணர்த்துகிறது.

*"தாமரை புரையும் காமர் சேவடி*
*பவழத் தன்ன மேனி திகழொளி*
*குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்*
*நெஞ்சு பகவெறிந்த அஞ்சுடர் நெடுவேல்*
*சேவலம் கொடியோன் காப்ப*
*ஏம வைகல் எய்தின்றால் உலகே"*

- பாரதம் பாடிய பெருந்தேவனார்.

தாமரை போன்ற திருவடிகள், பவழம் போன்ற திருமேனி, குன்றி மணியில் உள்ள செம்மையினுஞ்சிறந்த நிறத்தில் ஆடை, குன்றழித்து ஒளிரும் வேல், சேவல்கொடி இவற்றுடன் காட்சியளிப்பவன் முருகன். அத்தகைய கடவுளின் அடியவரும் செந்துவர் ஆடை புனைந்து பொதுமை தோன்றச் செல்வது பொருத்தமே

பிறப்புக் கதை

'மெய்ப்பொருள் ஒன்று. சான்றோர் அதற்குப் பல பெயரிட்டிருக்கின்றனர்' என்கிறது வேதம். உலகைக்கடந்தும் அதன் 'உள்'ளும் இருப்பதால் 'கடவுள்' என்பர். எங்கும் பரவியுள்ளதால் 'இறைவன்' என்பர். எங்கும் நிறைந்த பொருள், ஆதலால் 'பராபரம்' என்பர். உருவம் ஒன்றில்லா ஆண்டவன், மக்கள் தாம் கற்பித்துக்கொண்ட வடிவில் வணங்கும் போது, அவ்வுருவத்தில் வந்து அருள் செய்கின்றார். முருகன் பிறப்பும்

அத்தகையதே. "அருவமும் உருவமும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனி ஆகக் கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்கிறார் - கச்சியப்பசிவாசாரியார்

முருகன், சிவபெருமானின் திருக்கண்களினின்றுந் தோன்றி, காற்றாலும் நெருப்பாலும் தாங்கப்பெற்று, நாணல் பொய்கையில் குழந்தையாய், மண்ணில் திருவிளையாடல் புரிந்தார் எனக் கந்த புராணம் கூறுகிறது.

முருகன் இயற்கை முதல்வன், அவனே பஞ்ச பூதங்களின் காரணன் என்னும் தத்துவங்களை இக்கதை புலப்படுத்தும். நக்கீரனாரும், முருகது இயற்கை வடிவை, அருவி,சோலை, மலையாகப் பாடியிருத்தல் கவனிக்கத்தக்கது.

**திரு உருவம்:**

ஆறு முகங்கள் முருகனுக்கு உரியவை. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் அறிய உதவும் ஐம்பொறிகள் மற்றும் மனது ஆகியவற்றின் உருவகமே அவை. ஆறு ஆதாரங்கள் அல்லது ஆறு குணங்களை அவை விளக்குகின்றன. மேலும், பிரணவத்தோடு கூடிய ஐந்தெழுத்தின் அறிகுறியாகவும், நாற்றிசை மேல் கீழ் ஆறில் நிறைந்த சிதாகாச வடிவத்தின் அறிகுறியாகவும் ஆறு சமயப் பொருள் விளக்கமாகவும் கொள்வர். மக்களுக்கு அவர்களின் ஆற்றலை நினைவூட்டும் வகையில், பன்னிரண்டு கைகளை உடையவராகத் திகழ்கிறார். முயற்சியுடைய மனிதன் பல கைகளை உடையவன் போல ஆகலாம் என்பதைத் திருக்கைகள் உணர்த்துகின்றன.

அவரது கைவேல், ஞான சக்தி எனப்படும். ஞான சக்தி (அறிவாற்றல்) எழுந்து பாயும் போது முனைப்பு அழிந்துபடும். "ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்" என இறைவனை மணிவாசகர் அறிவுமயமாகக் குறித்தார். ஆழ்ந்து அகன்று கூர்ந்து உள்ளவேல், "அறிவே வெற்றி தரும் ஆயுதம்" என்பதை உணர்த்துகிறது.

மனைவியராகக் கூறப்படும் தெய்வயானையும், வள்ளியும், கிரியா சக்தி மற்றும் இச்சாசக்தியின் வடிவங்களே. மயில் அவரது வாகனம். இயற்கையின் அழகெல்லாம் முருகனைச் சார்ந்தவையே என்பதை அது விளக்குகிறது.

சூரபன்மனை வேற்படை இருகூறாக்கிக் கடலில் வீழ்த்தியபோது, அவை கோழியும் மயிலும் ஆயின. முறையே கொடியாகவும் வாகனமாகவும் அவற்றை முருகன் கொண்டார் என்கிறது கந்த புராணம்.

நாம் அறிவு என்னும் படையினால், அறியாமை, உள்ளத்துத் தீய குணங்கள் ஆகிய பகைமையை அழித்து, வெற்றியும் முன்னேற்றமும் பெறவேண்டும் என்பதை இவை உணர்த்துகின்றன.

காந்தள் மாலை, கடம்ப மாலை, மறி, மஞ்ஞை, சாபம், மரன், வாள், ஈட்டி, குடாலி, கணிச்சி, கனலி, மணி ஆகியவை இவர்க்கு உரியவை எனச் சங்க இலக்கியங்கள் கூறும்.

**உறைவிடம்:**

பக்தர் மனம், களன், கா, காடு, யாறு, துருத்தி, வைப்பு, சதுக்கம், சந்தி, கடம்பு, மன்றம், பொதியில் அவர் உறைவிடங்கள். மேலும் குன்றுகள் எல்லாம், அவர் இருப்பிடங்கள்.

*குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே*

- திருமுருகாற்றுப்படை 217

திருப்பரங்குன்றம், திருச்சீர் அலைவாய், திரு ஆவினன்குடி, திருஏரகம், பழமுதிர்ச்சோலை, திருத்தணிகை ஆகியவை ஆறுபடை வீடுகள்.

**திருநாமங்கள்:**

முருகனைப் பல வேறு பெயர்களால் தமிழர் குறித்தனர். வேலன், சிவகுமாரன், கொற்றவைமகன், மதி ஆரல் பிறந்தோன், மலைமகள்மகன், தானைத்தலைவன், தெய்வயானைகணவன், மாற்றோர் கூற்று, மாலைமார்பன், நூலறி புலவர், செருவிலொருவன், மள்ளன், மங்கையர் கணவன், மைந்தரேறு, குறிஞ்சிக்கிழவன், சேய், செந்தி முதல்வன், மாயோன் மருமகன், ஒருகை முகனின் தம்பி, ஆறுமுகன், கடம்பன், கதிர்வேலன்

என்றெல்லாம் பரிபாடலும் திருமுருகாற்றுப்படையும் குறிக்கின்றன. செவ்வேள், கந்தன், சிவதநாயகன், ஞானபண்டிதன், குமரன், சுவாமிநாதன், சுப்பிரமணியன், தகப்பன் சுவாமி, பாலகுருநாதன், பாலுசுந்தரன், கார்த்திகேயன், சேவற்கொடியோன், காங்கேயன், தண்டபாணி, சரவணபவன், மயில்வாகனன் என்னும் பெயர்களும் முருகனுக்குரியவை.

## திருவிளையாடல்

*"குருகொடு பெயர்பெற்ற மால்வரை உடைத்து*
*மலை ஆற்றுப்படுத்த மூஇரு கயந்தலை!"*

- பரிபாடல் 5: 9 -10

கிரவுஞ்சம் பிளந்து, மாமரத்தை யழித்து, பகை சூர் வென்றழித்து, தேவர்துயர் தீர்த்தது இவருக்கு எளிய திருவிளையாடல்.

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் கூறுகிறார்.

(அத்தியாயம்10, கருத்துரை 24)

"பார்த்த புரோகிதர்களுள் முதன்மையான பிருகஸ் பதியாகவும், சேனைத்தலைவர்களுள் ஸ்கந்தனாகவும் ஏரிகளுள் சமுத்திரமாகவும் யான் இருக்கின்றேன்".

## வழிபாடு:

முருகவழிபாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகத்தில் நடைபெற்றது.

*"..... முருகு என உணர்ந்து, முகமன் கூறி*
*உருவச் செந்தினை நீரொடு, தூஉய்,*
*நெடுவேள் பரவும், அன்னை அன்னோ!"*

- அகநானூறு - 272: 13- 15

எங்கும் நிறைந்த அழகுப்பொருளை, முருகனை, அருவமாகவும் வணங்கலாம்.

*"அறிவை யறிவாலறிந்து - நிறைவாகி*
*அகில புவனாதி யெங்கும்*
*வெளியுற மெய்ஞ்ஞான இன்ப*
*அமுதை யொழியா தருந்த அருள்வாயே"*

வடிவத்தை நினைந்து நினைந்து பழகியுள்ள நெஞ்சில்,

அருவப் பொருள் எளிதில் அடங்குவதில்லை. அலையும் நெஞ்சை ஒன்றில் பொருத்தி நிறுத்தும் ஆற்றல் உருவ வழிபாட்டிற்குண்டு.

மலைநிலைக் கடவுளாம் முருகனை வழிபடச் செல்பவர், மலை, காடு, ஞாயிறு, அருவி, தென்றல் முதலிய இயற்கையோடு இயைகின்றனர்.

கோழிக்கொடியோடு நிற்கும்படி நிறுத்தி வழிபடும் ஊர்கள் தோறும், முருகன் எழுந்தருளுகிறான். பண்டைத்தமிழர் முருகக்கடவுளைத் தம் அன்றாட வாழ்விலே பிணைத்துக் கொண்டதால்தான், வேலன் வெறியாட்டு நிகழ்ந்தது. வேலனாட மகளிர் குரவை ஆடினர்.

முருகனின் அழகிய திருவுருவம் கண்டு விரும்பித் துதித்து கைகளைத் தலைமேல் கூப்பிவைத்து, வாழ்த்தி, திருவடி தலையிலுறும்படி வணங்கினர் அடியர்.

*"முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்தி,*
*கைதொழூஉப் பரவி, கால் உற வணங்கி...."*

- திருமுருகாற்றுப்படை 251-252

அறவோர், நீராடி ஈரஉடையுடன் கைகளை உச்சியில் கூப்பி, துதித்து, "நமோ குமாராய" என்னும் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து, நறுமண மலர் கொண்டு, வழிபடுங்கால மறிந்து வழிபட்டனர். முருகன் "அஞ்சல் ஓம்புமதி, அறிவல், நின்வரவு" என அருள்வார். நித்தியம் மூன்று வேளை வழிபாடு அல்லாமல், சிறப்புவழிபாடுகளையும் அடியவர் செய்வர். கார்த்திகேயனுக்கு, கார்த்திகை நட்சத்திரத்தில் அமையும் கிருத்திகையும், சஷ்டியும் சிறப்பு வழிபாட்டுக்குரிய நாள்கள்.

*"மூவிரு முகங்கள் போற்றி!*
*முகம் பொழி கருணை போற்றி!*
*ஏவருந் துதிக்க நின்ற*
*ஈராறு தோள் போற்றி! காஞ்சி*
*மாவடி வைகுஞ் செவ்வேள்*
*மலரடி போற்றி அன்னான்*
*சேவலும் மயிலும் போற்றி!*
*திருக்கைவேல் போற்றி போற்றி!"*

# ஈவோரும் ஏற்போரும்

- பேராசிரியர் ந. சுப்பிரமணியன்

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாப்பாவிற்கு ஒரு 'அரை உண்மையை' ஓர் அண்மைக்காலப்புலவர் கூறினார். சாதிகள் என்னும் சொல்லுக்குத் தேவையான அடைமொழிகளைப் பெய்து அவர் கூறியிருந்தாராயின் அவர் ஒரு முழு உண்மையைக் கூறியிருப்பார். வேறொரு புலவர்- அவர் இடைக்காலத்தவர். அவரும் குழந்தைகளையும் பேரறிவாளர்களையும் மனதில் இட்டுக்கொண்டு பெரிய உண்மைகளைக்கூறும் இயல்பினர். அவர்தான் அசதிக் கோவை பாடிய ஔவையார். அவரும் சாதிகளைப் பற்றிக் கூறினார். அவர் 'சாதியிரண்டொழிய வேறில்லை'- இட்டார் இடாதார் என்று சாதிகளை இரண்டாகப் பிரித்து, இவையன்றிப் பிறிதொரு சாதி இல்லையென்று வரையறுத்துக் கூறினார். இதுவும் ஒருவகை அரை உண்மையே. ஏனெனில், பிற சாதிகளும் உள என்பது மறுக்க முடியாதவோர் இயற்கை உண்மை. அவையாவன: சான்றோர்-கயவர், ஆடவர்-மகளிர், இளைஞர்-மூத்தோர், கற்றோர்-மற்றோர், செல்வந்தர்-நல்கூர்ந்தார் மற்றும் இன்னோரன்ன.

இவர்களில் இட்டார்-இடாதார் என்பாரை மட்டும் மேற்கொண்டு ஆய்வோமாயின், அவரிடை நட்பு வியத்தகு தோற்றங்களையுடையது என்பது புலனாகும். இட்டாரில் புகழை விரும்பி இட்டாரும் ('உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பாருக்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்' என்றாராதலின்), 'ஈதலறம்' என்பதையுள்ளியிட்டாரும், பிறர்க்கு இன்று இடுவதை, பிற்காலத்தேவைக்கு எய்தக் கூடிய சிலபலன்களைக் கருதி இட்ட 'முதலீடு' என்று கருதி இட்டாரும் எனப் பலவகையினராவர். இடாதாரை நோக்கின் அவரிடைச் சிறப்பாக இருவகையினரேனும் காணப்பெறுவர்; அவர்களில் ஒரு

குழுவினர் பிறவி உலோபிகள். மற்றொரு கூட்டத்தினர் இத்தகுபொருள் யாதொன்றும் இல்லாமையால் இடாதார். இவர்கள் சந்தர்ப்பம் வற்புறுத்தலால் இட இயலாத நிலையில் இருப்பவர்கள். இவர்களே நல்கூர்ந்தார். பிறகு இவர்கள் எங்ஙனம் பிறர்க்கு ஈவர்?

இவ்விரண்டாம் வகையினர் ஐயம் வேண்டினார்க்கு 'இல்லை' என்பாராயின் அவர் மீது அடிக்குறைபாட்டுக் குற்றம் சாட்டுதல் தவறாகும். 'இசையாதவொன்றை இல்லென்றல் யார்க்கும் வசையன்று வையத் தியற்கை' என்றார் சான்றோரும்.

இனி மக்களை இட்டார் - இடாதார் என இரு சாதிகளாகப் பிரித்துப் பேசிய அம்மூதாட்டி ஏற்றாரையும் ஏற்கமாட்டாது ஏமாந்தாரையும் பற்றியொன்றும் கூறிற்றிலர். ஆயினும் ஈதல் ஏற்றல் ஆகிய இருவகைச் செயற்பாடுகளிடையே பிணக்கு யாதொன்றும் நிகழா வண்ணம் 'ஏற்பதிகழ்ச்சி' என்றும் 'ஐயமிட்டுண்' என்றும் மாறுபட்ட இரண்டையும் ஒரு சேரக்கூறி வைத்தார். ஆயினும் ஈதலறம் என்பதே மிகச்சீரிய அறவாய் பாடு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இஃது ஈவோரிடையே ஓர் உள்ளக்கிளர்ச்சியை ஆக்குவதற்கே எனலாம். ஆதலாற்றான் 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்று இரட்டுற மொழிந்து வைத்தார்.

ஆயினும் இவையெல்லாம் ஏற்பாரில் சிலர் சேர்ந்து ஏற்படுத்தி வைத்த அறக்கோட்பாடுகளேயல்லாமல் வேறல்ல என்பது சில அறிஞர்கள் கருத்து. மேலும் 'இரப்பாரை யில்லாத ஈர்ங்கண் மாஞாலம் மரப்பாவை சென்று வந்தற்று' என்று வேறொரு கோணத்திலிருந்து இரத்தலின் இன்றியமை யாமையையும் சிறப்பினையும் எடுத்துக்கூறுவர், இவ்விருவேறு உலகத்தியற்கையை எக்காரணம் கொண்டும் மாற்றவிரும்பாதவர்கள்.

ஈதலைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறுகின்றார். அஃது ஈ, தா, கொடு என்று மூவகைப்படும் என்றார். 'ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே', 'தாவென்கிளவி யொப்போன் கூற்றே', 'கொடுவென்கிளவி யுயர்ந்தோன் கூற்றே' என்று அவற்றைப் பொருட்பாகுபாடு செய்து அவர் விளக்கியுள்ளார்.

இனி, ஏற்போரின் நிலை எவ்வாற்றானும் வேறுபட்டுக் காணப்பெறுவது இயற்கையே. 'இன்மையின் இன்னாதது இன்மையே' என்பதும் அதனினும் பெரிய இழிதகைவு ஒன்றில்லை என்பதும் யாவருமறிந்தவையே. பிற்காலத் தெழுந்த அல்லூர் தேசராசப்பிள்ளை என்பார் தமது குசேலோபாக்யானத்தில்,

பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாமகல வோட்டி மானமென்பதனை வீட்டி
யில்லெலா மிரத்தலந்தோ விழிதொழி லெந்தஞான்றும்

என்று கூறியுள்ளது யாவருமறிந்தது. எனினும் இரந்தே பழகிவிட்டவர்களுக்கு அவ்விழிதகையுணர்ச்சி மரத்துவிடும்.

இரந்தே பழகி விட்டவர்களிற்சிலர் 'இரத்தற் றொழிலில் இழிவுஒன்று மின்று என்பது மட்டுமன்று, அது சான்றோர் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான கடமையுமாகும்' என்பர். இசை வல்லுநரான திருவையாற்றுத் தியாகராசர் உஞ்ச விருத்தி மேற்கொண்டார் என்று இசையுலகு இன்றும் பெருமைப்படுகிறது. இரத்தற்கலையின் எல்லையைக் கண்டு அதனையும் மீறியவர்களை 'இரத்தல் மன்னர்'(Prime among beggers) என்பர். இவர்கள் 'கொடுப்போரேத்திக் கொடா ஆர்ப்பழிப்பர்.' ஏற்போர் கையுயர்ந்தும் அளிப்போர் கை தாழ்ந்தும் இருக்க வேண்டும் என்று விதித்து, கொடுப்போர் தம் அங்கையில் கொடையை வைத்துக்கொண்டிருப்ப, ஏற்போர் அதனை அதனின்றும் ஓங்கிய தம் கையால் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறுவர். ஏற்போர் பெருமையை இவ்வாறெல்லாம் மிகுத்துக் கூறுதலோடமையாது

ஈவோரின் தீங்கினை ஏற்போன் சூழ்தல் விண்டுவாகிய இறைவனும் அவனால் வீழப்பட்டாரும் செய்வர் என்று புராணம் கூறும். இவற்றிற்கு மகாபலி, கொடையாளி கர்ணன் என்போர், வாமனன், இந்திரன், குந்தி என்போரால் தீங்கிழைக்கப்பட்ட கதைகள் உதாரணங்கள் என்பர்.

ஏற்போர் ஈவோரிடம் நன்றி கூர்தல் வேண்டும் என்று பொதுவாக நன்மக்கள் எதிர்பார்ப்பது இயல்பேயன்றோ? இதற்குமாறாக ஈந்தோரிடம் ஏற்றோர் அவர் செய்த நன்றியை மறந்து அவருக்குத் தீங்கு விளைவிக்கத் துணிதலும் உண்டு. அவர்களை நன்றி மறப்பவர் என்று வாளா கூறாமல் செய்ந்நன்றி கொல்பவர் என்றே கூறுவர். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதே அறத்தின் கூற்று வசதியிருந்தும் கொடார்க்குப் பழியும் பாவமும் வந்து எய்துதல் ஒருதலை என்று கருதியவர்களுக்குக் கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என்பதும் ஒரு கோட்பாடு.



# நற்றிணையில் கபிலர் பாடல்கள்
(ஆங்கில மொழிபெயர்ப்பு)

# THE POEMS OF KAPILAR IN THE NARRINAI

Dr. A. Dakshinamurthi.

13.KURINCHI

(The confidante speaks to the heroine)

O friend whose arms are wide and comley!
Your cool eyes are streaked red;
They resemble the bloodstained darts
Just pulled out by the milletguards
From the wounded animal's chest.
The green-hued flocks of parrots
Steal away the thick millet ears.
They are quite ignorant that they are
watched by the peafowls in their nests
Built on the hill where the flowers of the Venkai trees
With small fruit. are scattered on the ground
Like innumerable sparks of fire
When an ironsmith hammers red-hot iron.
You do not rise from your seat
And chase the parrots away.
At least do not cause damage to your beauty
By weeping in the presence of strangers.

Implied meaning :

The peacocks abiding in the nests strewn with the Venkai flowers are watching the parrots which steal away the millet ears. But the parrots think that the peacocks do not know their plundering. Like this, the friend of the heroine watches the movements of the heroins

32.KURINCHI
(The confidante of the heroine speaks to the heroine)

Friend,
The hills are dark like the hue of Thirumal
And from their tops cascade down streams in hue like

Balarama.

Such is the land of our lover.
You refuse to understand my truthful words
When I say that he grieves
Gretatly attracted by your charm.
Think for yourself and discuss with your near kin
And arrive at a decision.
Doubt not his sincerity. The wise cultivate friendship
After due deliberation. Once friendship is made,
It is not subject to any scrutny at all.

This verse carries a message on friendship.
This reminds one of the couplet 791 of the Thirukkural.

59.MULLAI

( The hero speaks to his charioteer during his homeward journey)

My beloved has boundless love for me;
Her heart never ceases to think of me;
She now abides in our village
Situate in a hard-soiled woodland;
Here, a hunter goes ahunting
During the day time and catches
The wild lizards, digs out striped toads,
And also the winged cochineal insects
From the tall columns of White ants
And then hunts a hare. He makes
A bundle of all these and carriers home
On his shapely shoulders,
Only to forget everthing and sleep
After getting intoxicated with abundant toddy.
She stayed all these days
With patience, in the pasture,
Where minute Mullai buds burgeon
Alas, here grief will be acute indeed!

65.KURINCHI

(The confidante of the heroine speaks after having heard an augury)

Our lover is the chief of a montane region
Where a tusker is grievously wounded
In a fight with a tiger, in the ford
Of a silvery stream and causes
The green algae spread all over
The wild stream that flows
Eroding its banks, where the heartless hunters
Aim arrows at it, to pull out
Its beautiful tusks causing the animal
To trumpet, like the rumbling thunder.
May the woman who lives next to our house
Taste the heavenly nectar for, she augured
The coming of our lover,
In her voice as sweet as Kidangil

(Kidangil was a beautiful town which was glorified by poet Poikaiyar)

Implied meaning:

The elephant which got wounded in the fight - The heroine grieving of her assailing love.

The hunters shooting arrows - The village women gossipping about the heroine.

The elephant trumpets - The heroine's sorrow over the gossip.

The trumpet of the tusker echoes in the mountain - The news of the heroine's sorrow reches the ears of the hero.

77.KURINCHI

(The hero speaks to his heart)

My heart!
Malayan rode on his horse

And besieged the alien territories
When war-drums thundered, sounded
By the lowly ones; he devastated
Many a fortress, hard to capture,
And heaved, sighs of relief.
Even like that Malayan
Who triumphed over his foes,
The joyful and tender glances
Of the eyes, fed with khol
Of our young darling
Have triumphed over us
And so we are now drawn toward her.
She has a forelap, richly adorned
With yellow spekles; her fore arms
Are bedecked with clasping
And shing bangles; these are bangles
Wrought by expert smiths using a file.
She abides in a small village
Of a few streets, where abound jack trees.
From whose brances with red stalks
Clusters of fruits whose drupes
Are seen stewn in the foreyard
Of a house where the housewife
Goes to sleep at night
Lulled by the noise of the cascading Stream.

Implied meaning:

The jack fruit is covered with the skin full of thorns. Yet it has the sweet and juicy drupes inside. Like this, the village is full of relatives who are against kinship with the heroine. Yet, it is the very same place which shelters his Sweetheart.

# மக்களாட்சி வளர்ந்த வரலாறு

பா.சூரியநாராயணன்

## 1. மக்களாட்சிக் கருத்தின் தோற்றம்

மனிதன் தன் இனத்தாரோடு கூட்டமாகவோ சமுதாயமாகவோ கூடி வாழும் இயல்பினன், அவன் சமுதாயத்தின் ஒருவனாக வாழ்பவன், அதனுடைய உதவியினால் தனக்குத் தேவையான உணவு, உடை, இருக்கை, உரிமை முதலியவற்றைப் பெறுவதற்காகவும், சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கும் இந்தத் தேவைகளெல்லாம் நிறைவு செய்யப்படுதவற்காகவும், சமுதாயத்தின் நலனுக்கு ஏற்ற சில நெறிமுறைகளுக்கு அவன் கட்டுப்பட்டும், அந்நெறிமுறைகளைச் செயல்படுத்தும் ஆட்சி நிறுவனங்களுக்கோ, ஆட்சி அலுவலருக்கோ கீழ்ப்படிந்தும் நடக்கும் இயல்பினனாகவும் இருக்கிறான். எனவே, மனிதனிடம் காணப்படும் இவ்விரு இயல்புகளும், இனத்தாரோடு கூடிவாழும் இயல்பும், சமுதாயத்தின் சார்பாக நடைபெறும் ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருக்கும் இயல்பும் அவனுடைய அரசியல் வாழ்வின் அடிப்படைகளாக அமைந்திருக்கின்றன.

மனித சமுதாயங்கள் உலகின் பல்வேறு இடங்களிலும், பற்பல காலங்களிலும் தத்தமக்கு உகந்த ஆட்சி அமைப்புக்களில் அல்லது அரசாங்க வகைகளில் வாழ்ந்து வந்துள்ளன. உலக அரசியல் வரலாற்றில் அவை விரித்துக் கூறப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானால், பண்டைய தமிழக அரசாங்கங்கள், வட இந்தியாவிலிருந்த மௌரிய, குப்த, முஸ்லிம் அரசாங்கங்கள், ஐரோப்பாவில் பண்டைய கிரீஸ், ரோம் முதலியவற்றிலிருந்த நகரரசுகள், பேரரசுகள், எகிப்து, சுமேரியா, பாரசீகம், சீனா முதலியவற்றிலிருந்த அரசுகள், இடைக்காலத்தில் உருவாகிய பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய நாடுகளின் அரசாங்கங்கள் ஆகியவற்றைக் கூறலாம். உலக

வரலாற்றில் பற்பல நாடுகளின் எல்லைகளும், அரசாங்க வகைகளும் போர், உடன்படிக்கை முதலிய நிகழ்ச்சிகளால் பெரும் மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளன. பழைய அரசாங்கங்கள் சிலவும், பழைய நாடுகள் சிலவும் மறைந்தும்,' புதிய நாடுகளும் அரசாங்க வகைகளும் ஆங்காங்கே தோன்றியு மிருக்கின்றன. இத்தகைய மாறுதல்களெல்லாம் ஏற்பட்ட போதிலும், காரல் மார்க்ஸ் போன்றோர் (1818-1883) அரசு, அரசாங்கம் என்ற நிறுவனங்களுக்குத் தேவையே இல்லாமல், அவை உதிர்ந்து, மறைந்து போகும் நிலை உண்டு என்பது பொதுவுடைமைக் கோட்பாட்டில் கூறியபோதிலும் உலகெங்கிலும் பல்வேறு மனித சமுதாயங்கள் பல்வேறு அரசுகளின் அல்லது நாடுகளின் எல்லைகளுக்குள்ளும் பல்வேறு வகையான அரசாங்க அமைப்புக்களின் அதிகாரத்துக்கு உட்பட்டுத்தான் இன்றளவும் வாழ்ந்து வருகின்றன. அவைகள் வாழும் நாடுகளின் எல்லைகள் சோவியத் யூனியனைப் போல, பல்லாயிரக்கணக்கான சதுர மைல்கள் பரப்பளவுள்ளதாக இருக்கலாம். அல்லது ஒருசில சதுர மைல்கள் பரப்பளவுள்ள வட ஸ்பெயினிலுள்ள அண்டோரா என்ற சிறு குடியரசு நாட்டினைப் போலவும் இருக்கலாம். அவற்றின் அரசாங்கங்கள் பண்டைக்காலம் முதல் இக்காலம் வரையிலும் மக்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய 1. முடியாட்சி, 2.உயர்குடிப் பிறந்தோராட்சி (Aristocracy) 3.செல்வர் ஆட்சி (Oligarchy) 4.சர்வாதிகார ஆட்சி 5.மக்களாட்சி (Democracy) முதலிய வகைகளில் ஏதாவதொன்றைச் சேர்ந்ததாக இருக்கலாம் அல்லது அவை இவற்றுள் ஒரு சில சேர்ந்த ஒரு கலவை அரசாங்க வகையாகவோ, ஒரு அரசாங்க வகையின் பெயரை வைத்துக்கொண்டு, நடைமுறையில் வேறொரு அரசாங்க வகையைச் செயல்படுத்திக்கொண்டோ இருக்கலாம். எப்படிப்பட்ட மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருந்தாலும், இன்றளவும் மனித சமுதாயங்கள் அரசு, (State) அரசாங்கம் (Government) என்ற இரு அமைப்புகளோடு இணைந்துதான் இருந்து வருகின்றன என்பதே உண்மை.

☆ எடுத்துக்காட்டாக, பண்டையக் கிரேக்க நகரரசுகளில் ஒன்றாகிய ஸ்பார்ட்டா (Sparta) என்ற சிறிய நகரரசு (City-State) இரண்டு அரசர்கள், நிலப்பிரபுக்களடங்கிய ஒரு ஆலோசனை மன்றம் (Gerousis)பொது மக்களடங்கிய ஒரு மன்றம், (Apella) பொது மக்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட, நிருவாக அதிகாரங்களைக் கையாளுகிற ஐந்து அலுவலர்கள் (Ephors) ஆகியோரடங்கிய ஒரு அரசாங்கத்தால் ஆளப்பட்டது. இக்கலவை அரசாங்கத்தில் முடியாட்சி, செல்வராட்சி, குடியாட்சி ஆகியவற்றின் கூறுகள் கலந்திருக்கின்றன. அதேபோல ஒரு அரசாங்க வகை நடைமுறையில் வேறொன்றாக இயங்குவதும் உண்டு. இக்காலத்தில் பல நாடுகளில் காணப்படுவது போன்று, பண்டைக்காலத்திலும் கிரீசின் ஆதென்ஸ் (Athens) என்ற நகரரசில், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செயல்பட்ட குடியாட்சி அரசாங்கமானது அதில் பெரும் அளவில் மக்களுடைய ஆதரவோடு நீடித்த காலத்துக்குப் பணியாற்றி வந்த மக்கள் தலைவர் பெரிக்லீஸ் (Pericles) என்ற ஒரே ஆளின் அரசாங்கமாகவே இருந்தது. இக்காலத்திய அரசியலாசிரியர்களால் சுட்டிக்காட்டப்படும் மேலே குறிப்பிடப்பட்ட ஐவகை அரசாங்கங்களும் ஆதென்ஸ் நகரரசில் கி.மு.8ம் நூற்றாண்டிலிருந்து கி.மு.ஐந்தாம் நூற்றாண்டுவரையிலும் ஒன்றன் பின் மற்றொன்றாக அந்த நகரரசின் குடிமக்களால் நிறுவப்பட்டுப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. இறுதியில், கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில், அந்த மக்களுடைய உரிமை உணர்வையும், சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் உணர்வையும் எடுத்துக்காட்டக்கூடிய மக்களாட்சி அரசாங்கம் நிறுவப்பட்டது.

ஐரோப்பிய அரசியல் அறிவு நூலுக்கெல்லாம் ஒரு அடிப்படையாக அல்லது தொடக்கமாக இருப்பவை, அதீனிய நகரரசைச் சேர்ந்த கிரேக்கருடைய அரசியற்கருத்துக்களும், (Political ideas)

---

☆ அரசியலமைப்புகளைப் பொதுவாக இவ்வைந்து வகையாகப் பாகுபாடுத்தியிருக்கிறார். கிரேக்க அரசியல் மெய்யறிவாளர் அரிஸ்டாட்டில் ( கி. மு. 384 - கி.மு. 322)

அரசாங்க வகைகளும், (Forms of Government)அரசியல் நிறுவனங்களும்( Political Institutions) ஆகும். எனினும் உலகில் மற்ற மக்கள் சமுதாயங்களில் பண்டைக்காலத்தில் காணப்பட்ட அரசாங்க வகைகளும், கருத்துக்களும் எடுத்துக்காட்டாகப் பண்டைத் தமிழக அரசு ஒவ்வொன்றிலும் இயங்கிவந்த ஊராட்சிமுறை, வட இந்தியாவில் மௌரியப் பேரரசில் இயங்கி வந்த முடியாட்சி முறை, ஊராட்சி முறை கிரேக்கக் கருத்துக்களினின்றும், நிறுவன முறைகளிலிருந்தும் தோன்றியவை என்று கருதுதற்கிடமில்லை. அரசின் வகைகளையும், அரசியல் கருத்துக்களையும் பொறுத்த வரையில், ஆங்கிலேயருடைய ஆட்சி நமது நாட்டில் நிறுவப்பட்டதற்குப் பிந்திய காலத்தில்தான் மேற்கத்தியரது அரசியற் கருத்துக்களும், அஃதாவது கிரேக்கருடைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட அரசியற் கருத்துக்களும், நிறுவன முறைகளும், நமது நாட்டவரிடை வெகுவாகப் பரவின என்று கொள்ளுதல் பொருந்தும். தமிழகத்தில் சோழருடைய பேரரசில் நல்ல வளர்ச்சி பெற்ற நிலையில் காணப்பட்ட உள்ளூர்க் குடியாட்சி முறைக்கு(Local Self Government)ஆதாரம் தமிழகத்தில்தான் காணப்படுகிறது.

மூன்று முக்கியமான அரசியலுரிமைகள் ஒவ்வொரு வயது வந்த குடி ஆளுக்கும் இருத்தல் வேண்டும்:

1.வயது வந்தோருக்கு சுதந்திரமாகத் தேர்தலில் வாக்களித்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ( Election )
2.தேர்தலில் வேட்பாளராகக் கலந்து நாட்டின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை (Representation)
3.அரசாங்கப் பணிகளில் சட்டமன்ற உறுப்பினராகவோ, நிர்வாகக் குழுவிலோ, நீதிமன்றத்தில் நீதிபதியாகவோ பணியாற்றும் பங்கை ஏற்றுக் கொள்ளுதல் ( Participation)

மேற்கூறிய மூன்று உரிமைகளைத் தவிர வேறு சில கட்டுப்பாடுகள் அல்லது சூழ்நிலைகள் (Condition) மக்களாட்சி வெற்றியாக இயங்குவதற்கு இருத்தல் வேண்டும்.

4.குடிமக்களே ஆளுவோராகவும் ஆளப்படுவோராகவும் இருக்கிற காரணத்தால், சமுதாயத்தில் ஓரளவேனும் பொறுமை உணர்வும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் ஏற்படுதல் வேண்டும்.

5.மக்களாட்சியின் வெற்றிக்கு அடுத்ததாக இன்றியமையாது வேண்டப்படுவது அரசாங்கத்தில் பங்கு பெறுவதற்கு உதவியாக, யாவருக்கும் ஓரளவேனும் பொதுக் காரியங்களை அறிந்து முடிவு செய்ய உதவும் கல்விப்பயிற்சி இருத்தல் வேண்டும்.

6.சமுதாயத்தில் யாவருக்கும் ஒத்த அரசியலுரிமை (Political equality) இருந்தால்தான் உண்மையான மக்களாட்சி இருக்கும், ஆகையால் பொருளாதாரத் துறையில் சமுதாயத் துறையில் பெருத்த ஏற்றத் தாழ்வுகள் காணப்படுதல் கூடாது.

7.பொதுநல இயல்புடைய தலைவர்கள் தோன்றுதல் வேண்டும்.

மக்களுக்கு ஆட்சியில் பங்கு உடைய மக்களாட்சி முறை எவ்வாறு பண்டைக் காலத்தில் கிரீஸ் நாட்டில் ஆதென்ஸ் நகரரசில் இயங்கிற்று என்று அடுத்துக் காண்போம்.

## *பண்டைய மக்களாட்சி வரலாறு - கிரீஸ்.*

மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்து நாட்டின் சட்டமன்றத்திற்கு அனுப்புதற்கும், மக்களுடைய பிரதிநிதிகள் ஆளும் நிர்வாகத்தைப் பொறுப்புடன் ஆளுமாறு கண்காணித்தற்கும் ஒரு நாட்டில் மக்களுக்கு உரிமைகள் இருக்குமாயின், அந்நாட்டில் மக்களாட்சி நடைபெறுவதாகக் கூறுவர். இந்தக் கருத்து முன்னர் கூறப்பட்டது.

### மக்கள் இனமும், பண்பும்

கிரேக்க மக்களின் இனமும், வாழ்ந்த நாடும் அவர்களிடையே சுதந்திர உணர்வையும், வீர உணர்வையும்

வளர்த்தற்கு ஓரளவு காரணமாக இருந்தன. இம்மக்கள் இந்தோ-ஜெர்மானிய அல்லது இந்தோ-ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள்[1] இவர்களைப் போல் கிரேக்கரும் வீரஉணர்வும், சுதந்திர உணர்வும் உடையவராவர், இவர்கள் மற்ற ஆரியக்கிளையினரைப்போல் வடஐரோப்பிய நிலப்பகுதிகளிலிருந்து தெற்கு ஐரோப்பியப் பகுதியில் குடியேறினர். இவர்கள் கிரீசில் இருந்த பழங்குடிகளை வென்று, அவர்களுடைய நிலங்களைக் கைப்பற்றி, தோற்றவர்களைத் தங்களுக்கு வேலை செய்யும் அடிமைகளாக வைத்துக்கொண்டனர். இவ்வாறு கிரேக்க சமுதாயத்தில் ஆட்சியில் பங்கு கொள்ளுதற்கு உரிமைகளை உடைய குடிமக்கள் வகுப்பு ஒன்றும்(Citizen class), முழு குடிமை உரிமைகள் பெற்ற இந்த வகுப்பாருக்கு வேளாண்மை முதலிய தொழில்களைச் செய்து உரிமைகள் இல்லாத அடிமைகள் வகுப்பு ஒன்றும் இருந்தன. இவ்விரு வகுப்பு முறைகளும் இருந்த காரணத்தால், பிழைப்புக்காக வேலை ஏதும் செய்ய வேண்டுவது இல்லாத குடிமக்கள் வகுப்பாருக்கு நேரடியாக ஆட்சியில், அரசியலில் பங்கு கொள்ளுதற்கு ஓய்வும், வாய்ப்பும் உரிமைகளும் இருந்தன.

11350

## நிலப்பகுதி

மக்களாட்சி பண்டைய கிரீசில் தோன்றுதற்கு அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதியும் ஓரளவு துணை செய்தது. தென் கிழக்கு ஐரோப்பாவின் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கிரேக்க நாட்டில் நெருங்கிய பல மலைத் தொடர்களும், ஆழ்ந்த வளைகுடாக்களும், தீவுகளும் உள்ளன.

---

1.இந்தோ-ஜெர்மானிய அல்லது இந்தோ-ஆரிய இனத்தைச் சேர்ந்த ஏனையமக்கள் கூட்டத்தார் இந்தியாவில் கி.மு.2000ல் குடியேறிய ஆரியர், இரேனியர், அர்மீனியர், இத்தாலியில் குடியேறிய இலத்தீன்கள் அல்லது ரோமானியர் ஐரோப்பாவில் பரவிய ஜெர்மனியர், பிரிட்டிஷ்தீவுகளில் குடியேறிய கெல்ட்டிக்குகள், டியுட்டானியர் ஆகியோர் ஆவர்.

மலைகள் நேராக, ஒரு ஒழுங்கில் செல்லாமல் கோணலாகச் செல்வதால், அவைகளுக்கிடையே சிறு சமவெளிகள் தோன்றின. ஒவ்வொரு வெளியிலும் குடியேறிய கிரேக்கர்கள் முதலில் கிராமங்களாக, தனியாக வாழ்ந்தனர். ஒரு பண்டைய ஆண் மூதாதையிடமிருந்து(Common Male Ancester) தோன்றிய பல குடும்பங்கள் ஒரு கிராமமாக ஒரு சமவெளியில் வாழ்ந்தன. அதுவே முதலில் தோன்றிய சமுதாயக் கூறு குடும்பம்(Family) ஆகும். பல குடும்பங்களும் ஒரு ஆண் மூதாதையிடமிருந்து தோன்றும் போது, அவை உறவுக்குழு(Tribe) ஆகும். அவை பண்டைய மூதாதை வழிபாட்டைச் செய்தற்கு ஒன்று கூடும்போது ஒற்றுமை உணர்வு உண்டாயிற்று. ஒவ்வொரு சமவெளியிலும் இவ்வாறு வாழ்ந்த சுதந்திர கிராமங்கள் நாளடைவில் தங்களுடைய பாதுகாப்புக்காகவும், அயல்நாடுகளோடு வாணிபம் செய்தற்காவும், ஒன்றாக இணைந்து ஒரு பொதுவான அரசாங்கத்தை அமைத்துக் கொண்டன. இவ்வாறு ஒவ்வொரு சமவெளியிலும் உள்ள பல கிராமங்கள் ஒரு பொதுவான அரசாங்கத்தின் கீழ் இணையும் போது, நகரரசு(City state) என்ற சமுதாய அமைப்பு தோன்றிற்று. இக்காலத்தில் நகரம் என்பது, நாடு முழுவதற்கும் உள்ள அரசாங்கத்தின் இருப்பிடமாக மட்டிலுமே இருக்கிறது. நகரமே அரசாக இல்லை. பண்டை கிரீசில் இருந்த சில முக்கிய நகரரசுகள் ஆதென்ஸ் (Athens), ஸ்பார்ட்டா(Sparta), தீப்ஸ்(Thebes), காரிந்த்(Corinth) ஆகியவை.

## நகரரசின் இயல்புகள்

1.கிரேக்க நகரரசு பரப்பளவில் சிறியது. 2.அதில் வாழ்ந்த குடிமக்கள் வகுப்பாரும் எண்ணிக்கையில் குறைந்தவர். 3.இதனால் குடிகளிடையே ஒற்றுமை உணர்வு உறுதியாகவும், எல்லாக் குடிமக்களும் அரசாங்கத்தில் ஏதேனுமொரு பங்கை ஏற்றுச் செய்யும் உரிமையைப் பெற்றும் இருந்த ார். ஆனால் இந்த ஒற்றுமை உணர்வு கட்டுக்கடங்காமல் போகவும், பொதுவாகப் பல நகரரசுகள் ஒன்றுபட்டுத் தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்க இயலாமற் போயிற்று.

## ஆதென்ஸ் நகரரசில் செயல்பட்ட மக்களாட்சி அரசாங்கம்:

### 1.முடியாட்சி

மக்களாட்சி முறை ஓரளவு நல்ல வகையில் இயங்கிய காலம் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டு ஆகும். கி.மு.ஏழாம் நூற்றாண்டு வரையில் ஆதென்சில் முடியாட்சி அரசாங்கம் இருந்தது. மற்ற ஆரிய இன மக்களுடைய அரசரைப் போலவே கிரேக்க அரசருக்கு சமயக்குருவுக்குரிய அதிகாரம், நீதிவழங்கும் அதிகாரம், படைகளுக்குத் தலைமை தாங்கும் ஆதிகாரம் ஆகியவை இருந்தன. சமயச் சடங்குகளை மேற்பார்வை செய்தல், வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்புச் செய்தல், போரை நடத்துதல் ஆகியவை அவருடைய பணிகள். குடும்பத்தொகுதிகளின் தலைவர்கள் அல்லது பிரபுக்கள் அடங்கிய முதியோர் சபை (Council of Elders or Boule)அரசருடைய கருத்துக்கள் செயலுக்கு வருமுன் அவற்றுக்கு ஒப்புதல் அளித்தது. இச்சபையிலுள்ள பிரபுக்களே அரசருடைய அதிகாரங்களைச் சிறிது சிறதாகக் கைப்பற்றி உயர்குடிப்பிறந்தோர் ஆட்சியை நிறுவினர். இதுதவிர சாதாரண சுதந்திரக் குடிமக்களடங்கிய மக்கள் மன்றம்(Assembly of the People or Agora) என்ற ஒரு அமைப்பும் இருந்தது. அரசர் அழைத்தபோது இது கூடி, அவரும் முதியோரும் சேர்ந்து செய்த தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்தது. இந்த மன்றம் தானாகவே கூடி எதையும் தீர்மானிக்கவோ, தன் முன் கொண்டு வரப்பட்ட செய்திகளை ஆய்வு செய்யவோ இயலாது. இந்த மக்கள் மன்றத்தாரே பிற்காலத்தில் மக்களாட்சி அரசாங்க வகை ஏற்ற மூலாதாரம் ஆகும்.

### 2.உயர்குடிப் பிரபுக்களாட்சி(Aristocracy)

கி.மு.ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆதென்சில் முடியாட்சி மறைந்து, குடியரசு(Republic) நிறுவப்பட்டு, பிரபுக்களாட்சி தோன்றிற்று, அரச குடும்பத்திலேற்பட்ட பூசல்கள், அரசர்களின்

திறமைக்குறைவு, சில அரசர்களின் எதேச்சதிகார ஆட்சி ஆகியவை முடியாட்சியின் மறைவுக்குக் காரணங்களாகும் என்பார் அறிஞர் அரிஸ்டாட்டில். இவை பொதுவாக எவ்வகை அரசாங்க வகையின் மறைவுக்கும் பொருந்துவன. நகரரசின் சிறிய நில எல்லைக்குள் அரசருடைய குறைபாடுகள் மக்களுக்கு எளிதில் தெரியவருகின்றன. எனவே முடியாட்சிக் காலத்தில் அரசனுடைய ஆலோசனை சபையிலிருந்து ஒழுங்காகவும், வழக்கமாகவும் அலுவல்களைச் செய்து செயலறிவு பெற்றிருந்த பிரபுக்களின் குடும்பத் தலைவர்கள் ஆட்சிப் பணிகளைத் தங்களுக்குள் முறைவைத்துப் பகிர்ந்து கொண்டு செய்தனர். ஆதென்ஸ், ஸ்பார்ட்டா, ஆர்காஸ், தீப்ஸ் முதலிய நகரரசுகளில் பெரும் நிலவுடைமையாளரும், படைத்தலைவரும் தோன்றவும், அவர்களிடயே செல்வமும், ஆட்சி அதிகாரமும் குவிந்தன. பிரபுக்களுக்கும், சாதாரண வகுப்பாருக்கும் இடையே மிகப்பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. பிரபுக்கள் தங்களுடைய ஆட்சியில் பல புதிய பதவிகளை அமைத்தும், வரையறுக்கப்பட்ட காலங்களுக்குப் பணி செய்யும் நீதி அதிகாரிகளை அமர்த்தியும், சமுதாயத்தைக் காப்பாற்றிய பழக்கங்களையும், வழக்கங்களையும் சட்டங்களாகத் தொகுத்தும்(Codification), பல புதிய குடியேற்ற நாடுகளை நிறுவியும் அரும்பணிகள் செய்தனர். எழுதப்பட்ட சட்டத்தொகுதி இருந்தால் தான் யாவருக்கும் நீதி கிடைக்குமென்பதைப் பலரும் உணர்ந்தனர்.

3.செல்வராட்சி

இவ்வளவு ஆக்கவேலைகள் பல செய்த பிரபுக்களாட்சியும் அதனுடைய இயல்பிலேயே காணப்பட்ட ஒரு குறைபாட்டின் காரணமாகப் பணக்காரராட்சி அல்லது செல்வராட்சியாகத் தேய்ந்து மாய்ந்து போயிற்று. சிறிய செல்வர் வகுப்புக்கும், அளவில் பெரிய பொதுமக்களுக்குமிடையே பிளவு வளர்ந்தது. எல்லாப் பதவிகளையும், செல்வரே வைத்துக்கொண்டனர். பொதுமக்கள் ஒதுக்கப்பட்டனர். பிரபுக்கள் சட்ட அறிவைத் தங்களுடைய நில உடைமைகளைப் பெருக்கிக் கொள்ளுதலில் முனைந்து நின்றனர். எனவே செல்வர்களுக்கு எதிர்ப்பு வளர்ந்தது. வேறுபாடுகளை நீக்கி,

சமுதாய சமத்துவத்தை (Social equality) ஏற்படுத்துதல் இன்றியமையாததாயிற்று. இந்த சமத்துவத்தை ஏற்படுத்தி சமுதாயத்தை மக்களாட்சிக்குத் தகுதி உடையதாக ஆக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

4.மக்களாட்சிக்கு முன்னோடியாக அமைந்தவை சட்டத்தொகுப்பாளர் ஆட்சி (Codifier or Aesymnete) சர்வாதிகார ஆட்சி ஆகியவை. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் இவ்விருவகை ஆட்சிகளும் ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து ஆதென்சில் தோன்றின. இவை தனிமனிதனுடைய ஆட்சி என்றாலும், சட்டத்தொகுப்பாளர் என்போர் நாட்டின் சட்டத்துக்கு ஒத்த முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி ஆவர். நாட்டின் சட்டம் யாவருமறியுமாறு எழுத்து வடிவத்தில் இருந்தால்தான், செல்வருக்கு மட்டுமன்றி ஏழைகளுக்கும் சட்டத்தின் வாயிலாக நீதி கிடைக்கும். குடியேற்ற நாடுகளில் வாணிபத்தில் பொருளீட்டிய வணிகர் கி.மு.ஏழாம் நூற்றாண்டினிறுதியில் ஆதென்சிற்குத் திரும்பி வந்து குடியுரிமை தேடினர். இவ்விரு காரணங்களினால், அங்கு முதலில் சட்டத் தொகுப்பாளராட்சியும், அடுத்து சர்வாதிகாரி ஆட்சியும் தோன்றின.

சட்டத்தொகுப்பாளர் என்போர் நாட்டின் சட்டத்துக்கு ஒத்த முறையில் அதாவது குறிப்பிட்ட காலத்துக்கு, தேர்தல் முறையினால், சட்டத்தைத் தொகுத்தற்பொருட்டு அதிகாரம் கொடுக்கப்பட்டவராவார். ஆனால் சர்வாதிகாரி(Tyrant) என்பவரோ மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் தனது போர்த்திறமையைப் பயன்படுத்தி திடீர்ப்புரட்சி செய்து(Coupd'atd) ஆட்சியைக் கைப்பற்றித் தன்வாழ்நாள் முழுவதும் ஆட்சியிலிருந்தனர். ஆகையால் சருவாதிகாரியாக இருந்தவர், கிரேக்கருடைய சுதந்திர உணர்வை மதிக்காமல், தேர்ந்தெடுக்கப்படாமல், வல்லந்தமாக(by force) ஆட்சியைக் கைப்பற்றினர். ஆகையால் கிரேக்க சருவாதிகாரிகள் குடிகளுக்குப் பெருமளவில் நன்மைகளைச் செய்தவர் ஆவர்.

ஆதென்சு மக்கள் தங்களுள் ஒருவராகிய சோலன்(Solon) என்ற அறிவாளியைச் சட்டத்தொகுப்பாளராகத் தேர்ந்தெடுத்தனர். இவர் தனக்கு முன் சட்டத் தொகுப்பாளராக இருந்த டிரேக்கோ என்பவர் எழுதிய சட்டத் தொகுப்பில் இருந்த, சிறுகுற்றங்களுக்குக் கூட விதிக்கப்பட்டிருந்த கடுமையான தண்டனைகளை நீக்கி, அதைச் செம்மைப் படுத்தினார். நிலத்தையும், உயிரையும் பணயமாக வைத்து வாங்கப்பட்ட கடன்களையெல்லாம் சோலன் தள்ளுபடி செய்தார். மேலும், நிலக்கூலி அடிமைகளாகத் தாழ்த்தப்பட்ட மக்களை உரிமையும், சுதந்திரமும் உடையவராக அவர் ஆக்கினார். கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் நாட்டை விட்டு ஓடியவர்களை எல்லாம் அவர் திரும்பி வருமாறு செய்தார். பிறப்பினடிப்படையில் இருந்த நான்கு சமுதாய வகுப்புக்களை அவர் மாற்றி, செல்வருடைய நில உடைமைகளைப் பறிமுதல் செய்யாமல், குடிகளுடைய நில வருமானத்தைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் சமுதாயத்தை 4 வகுப்புக்களாகப் பிரித்து, மேல் வகுப்பாருக்கு மட்டும் ஆர்க்கன்(archon) என்ற நிருவாக அலுவலுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமையை அளித்தார். மற்ற 3 மேல் வகுப்பாரும் மற்ற எல்லாப் பணிகளுக்கும் தகுதியுடையவராக ஆயினர். நான்காவது வகுப்பினர் அலுவலரைத் தேர்தெடுக்கவும், அலுவலரின் அலுவல்காலம் முடிவுற்றதும் அவர்களுடைய ஆட்சிச் செயல்களை ஆய்வு செய்யவும் உரிமை பெற்றனர். சோலனுடைய சீர்திருத்தங்கள், பழைய பிறப்பினடிப்படையில் அமைந்திருந்த சமூக வகுப்புமுறையை மாற்றிற்று. ஆனால், இவர் புதிதாகப் பொருளியலை அடிப்படையாகக் கொண்ட 4 சமூக வகுப்பு முறையை நிறுவிய காரணத்தால் மக்களாட்சிக்கு இன்றியமையாத சமூக சமத்துவம் தோன்றவில்லை. பொருள் வசதி உடையவரே அரசாங்கத்தில் அலுவல்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை பெற்றிருந்ததனால், அதீனிய அரசாங்கம் உண்மையில் மீண்டும் செல்வராட்சியாக மாறக்கூடிய இடர்ப்பாடு தோன்றிற்று. இந்தச் சூழ்நிலையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, பிசிஸ்ட்ரேட்டஸ்(Pesistratus) என்பவர், ஒருநாள், கி.மு.561ல், திடீரென்று நகரத்தின் பொது இடத்தில்

தோன்றி, தன் உடம்பின் மேல் சில புண்களைக் காட்டித் தன்னைச் சில செல்வர்கள் தாக்கினரென்றும், தன்னை சாதாரணக் குடிமக்கள் தான் காப்பாற்றுதல் வேண்டுமென்றும், தான் ஆட்சியாளனாக வந்தால், தான் அவர்களைக் காப்பதாகவும் கூறி, அவர்களிடம் உணர்ச்சி உண்டாக முறையிட்டார்.

## சருவாதிகாரி பிசிஸ்ட்ரேட்டஸ் ஆதென்சை மக்களாட்சிக்கு ஏற்றதாக ஆக்குதல்

பிசிஸ்ட்ரேட்டஸ், பிண்டார், எஸ்க்கைலஸ் முதலிய புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்தார், கட்டிடங்களை எழுப்பி, வேலையற்றோருக்கு வேலை கொடுத்தார், குடியேற்ற நாடுகளை வாணிபத்துக்கு ஊக்கமளித்தார். இவற்றினும் மேலாகப் பிற்காலத்தில் ஆதென்சில் மக்களாட்சிமுறை தோன்றவும், அதில் எல்லாக் குடிகளுக்கும் ஒத்த பங்கு இருக்கவும் வசதியாக, அவர் சமுதாயத்தில் உள்ள பொருளாதார வேறுபாடுகளை நீக்கி, பிரபுக்களில் தீயோரை நாட்டை விட்டு வெளியேற்றினார், ஒடுக்கப்பட்டவருடைய குடிமை உரிமைகளை மீட்டுப் பாதுகாத்தார்.

இவ்வளவு நன்மைகளும் சருவாதிகார ஆட்சியில் தோன்றினாலும், அவ்வாட்சி நீடித்து நிற்கும் இயல்புடையதாக இல்லை. ஏனெனில், அது தோன்றிய நோக்கமே ஒடுக்கப்பட்ட வறியவர்களுடைய உரிமைகளைக் காப்பதுதான். அந்த நோக்கம் சருவாதிகாரியால் நிறைவேற்றப்பட்டவுடன், எல்லாக்குடிகளும் பாகுபாடு எதுவும் இன்றி, அரசாங்க அமைப்பில் ஒத்த பங்கு கொள்ளும் தகுதி பெற்றுவிட்டனர். கிரேக்கருடைய இயல்பான சுதந்திர உணர்வும், மக்களாட்சி ஆர்வமும் பிசிஸ்ட்ரேட்டசின் சர்வாதிகார ஆட்சி முடிவடைந்ததும், செயல்படத் தொடங்கின.

5.மக்களாட்சி அரசாங்கத்தை நிறுவி கிளைஸ்தனீஸ்(Cleisthenes) செய்த சீர்திருத்தங்கள்:

அதீனியர் மக்களாட்சி அரசாங்கம் என்பதைப் பற்றிக்

கொண்டிருந்த கருத்தின்படி, அதில் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் நேரடியாகப் பங்கு இருத்தல் வேண்டும். அதாவது அது நேரடி மக்களாட்சியாகவே (DirectDemocracy)இருத்தல் வேண்டுமேயொழிய இக்காலத்திருப்பதைப் போன்று மறைமுக மக்களாட்சியாக (Indirect Democracy)இருத்தல் கூடாது. மேலும், குடிமக்கள் என்போர், கிரேக்க இனக் குடும்பங்களிலுள்ள ஆண்மக்களை மட்டிலுமே குறிக்குமே ஒழிய கிரேக்கக் குடும்பத்தின் பெண்மக்களைக் குறிப்பிடாது, எனவே அவர்களுக்கு ஆட்சியில் பங்கு எதுவும் இல்லை. அயலவர் அடிமைகள் ஆகியோருக்கும் அரசியலுரிமைகள் இல்லை. ஆகையால் பண்டைய ஆதீனிய மக்களாட்சி முறையை, அடிமை முறையிலமைந்த உயர்குடியினர் ஆட்சி என்று, 18 ஆம் நூற்றாண்டின் பிரஞ்சு அரசியல் சிந்தனையாளர் ரூஸ்ஸோ குறிப்பிடுவார். 1

இத்தகைய கருத்துக்களை ஆதாரமாக வைத்து, கிளைஸ்தனீஸ், 1.மக்கள் மன்றம் அல்லது எக்ளீசியா(Ecclesia) என்ற அமைப்பையும், 2.ஐந்நூற்றுவர் மன்றம் அல்லது பியூல்(Boule), 3.நிர்வாகக்குழுவையும்(Executive Committee), 4.மக்கள் சான்றாளர் நீதிமன்றத்தையும் (Popular Jury Court) அல்லது ஹீலியா(Heliaea) என்ற அமைப்பையும் நிறுவினார்.

1.எக்ளீசியா என்ற மக்கள் மன்றம்

இதுவே நாட்டின் முழுமைக்கும் உள்ள சட்டமன்றம் ஆகும். இதில் அதீனிய கிரேக்கருள் 18 ம் அதற்கும் மேற்பட்ட வயதுடைய ஆண்குடி மக்கள் யாவரும் தேர்தல் எதுவும் இல்லாமலே உறுப்பினர் ஆவர். கிரேக்கக் குடிமக்களுடைய கருத்துக்கள் இரண்டு: அரசியலில் பங்கு கொள்ளத்தக்கவர் என்ற முறையில் ஒரு குடிமகன் இன்னொரு குடிமகனுக்கு ஆருக்கு ஒப்பானவர். பல குடிமக்கள்

---

1 " a slave owing aristocracy " - J.J.. Rousseau.

ஒருங்கு கூடி, நாட்டின் பொதுவான பணிகளைப் பற்றி ஆய்ந்து செய்யும் தீர்மானத்தில்தான்(Collective wistom) உண்மையான தீர்ப்பு இருக்கும். இவற்றை அரிஸ்டாட்டில் சுட்டிக் காட்டுகிறார். இக்கருத்துக்களின் அடிப்படையில் வயது வந்த எல்லா ஆண்களும் தேர்தல் இல்லாமலே இந்த மன்றத்தில் உறுப்பினராயினர். இவர்களுடைய மற்றப் பணிகளை அடிமைகள் செய்ததனால், இவர்களுடைய அரசியற்பணிகளைச் செய்தற்கு வேண்டிய ஓய்வும், காலமும் இருந்தன. இந்த மன்றம் சாதாரணமாக நாற்பது முறையும், தேவைப்படும்போதும் கூடிற்று. இது கூடிய காலங்கள் நகரத்துக் கடைகளுக்கு விடுமுறை. இதன் கூட்டத்துக்குத் தலைவரை, ஐந்நூற்றுவர் மன்றத்தவர் தங்களிடையே இருந்து திருவுளச் சீட்டு முறைப்படி(System of choice of lot) தேர்ந்தெடுத்தனர். நாட்டின் பொதுப்பணிகளை ஐந்நூற்றுவர் மன்றம் ஆய்வு செய்து, மக்கள் மன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பிற்று. நாட்டின் எந்தக் குடியாளுக்கும் மக்கள் மன்றத்தில் பேச உரிமை இருந்தது. இதனுடைய தீர்மானத்துக்கெதிராக மேல்முறையீடு எதுவும் கிடையாது. இந்த மன்றத்தவர் இதில் பங்கு எடுத்துக்கொள்ளுதற்கு வசதியாக அவர்களுக்குச் சிறிது ஊதியம் கொடுக்கப்பட்டது. இது சட்டங்களை இயற்றாமல் வழக்கங்களையே ஆட்சி ஆணைகளாகச் செய்தது. இது செய்யும் ஆணைகள் அரசியலமைப்புக்கு மாறாக இருத்தலாகாது. அதன் ஆணைகள் அரசியலமைப்புக்கு மாறானவை என்று மக்களுடைய நீதிமன்றத்தில் எவரும் முறையிட்டால், அங்கு திருவுளச் சீட்டு முறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகள் முன்னர் வழக்கிட்டால் அது தள்ளுபடி செய்யப்படலாம். ஒவ்வொரு அதீனியக் குடியாளும், குடிமக்கள் கணக்கெடுப்பில் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டனர்.

வழக்குகள் தோன்றும்போது, அதீனியக்குடி வழக்கிடும் கட்சி எதிலும் சேராமல் நடுநிலையில் இருத்தல் கூடாது, திருவுளச் சீட்டு முறைப்படி எவர் தீர்ப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர் அந்தப் பணியைச் செய்தல் வேண்டும்.

2.ஐந்நூற்றுவர் மன்றம்

இது கிளைஸ்தனீஸ் ஏற்படுத்திய புதிய சமூகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. சோலன் பொருள் வருமானத்தை அடிப்படையாக வைத்து, அதீனியக் குடிமக்களை ஐந்து வகுப்புக்களாகப் பிரித்திருந்த அமைப்பிலுள்ள குறைபாட்டை நன்கு உணர்ந்த கிளைஸ்தனீஸ், அதை நீக்கிவிட்டு, அதீனியக் குடிமக்களையெல்லாம் புதிய சிறிய 10 கூறுகளடங்கிய ஒரே சமுதாயமாக ஆக்கினார். ஒவ்வொரு கூறும் வாழ்ந்த நிலப்பகுதி ஒரு மாவட்டம் அல்லது டெம்(Deme) ஆகும். இவ்வாறு ஆட்சியில் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் என்பது இக்காலத்திலுள்ளது போல அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதி அல்லது தொகுதியினடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நல்ல சீர்திருத்தம் நாட்டில் மீண்டும் சருவாதிகார ஆட்சி தோ‌ன்றாமல் தடுத்தது. மேலும் இதே நோக்கத்துக்காக கிளைஸ்தல் ஆஸ்டரசிசம்(Ostrcism) அல்லது 'நாட்டுக்குப் புறம்பாக்குதல்' என்ற ஒரு முறையையும் கொண்டுவந்தார். இதன்படி அதீனியக் குடிமக்கள் தங்களுள் எவரை நாட்டிற்கும், அரசாங்கத்துக்கும் பகைவனாகக் கருதுகின்றார்களோ, அவருடைய பெயரை ஓட்டுத் துண்டுகளில் எழுத வேண்டும். எவருடைய பெயர் கூடுதலான எண்ணிக்கையில் குறிப்பிடப்படுகிறதோ, அவர் குறிப்பிட்ட காலத்துக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் திரும்பிவரும்வரை அவருடைய உடைமைகளையும், குடும்பத்தையும் அரசாங்கம் பாதுகாத்தது.

ஐந்நூற்றுவர் மன்றமே ஆதென்சின் அன்றாட நிருவாக அலுவல்களைச் செய்தது. புதிய 10 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்த குடும்பத் தொகுதியினர் (அதாவது 30 வயதுடைய ஆண்கள்) திருவுளச்சீட்டு முறையின் மூலமாகத் தங்களிடையே இருந்து 50 பேர்களைத் தேர்ந்தெடுத்து, இந்த மன்றத்துக்கு அனுப்பினர். 10 மாவட்டங்களிலிருந்து மொத்தம் 500 உறுப்பினர்கள் வந்தனர். இவர்கள் 50 உறுப்பினர்களடங்கிய 10 நிருவாகக் குழுக்களாகப்(Executive Committees) பிரிந்தன.

அரசாங்க ஆண்டு ஒவ்வொரு மாதமும் 35 நாட்களடங்கிய 10 மாதங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாதத்திற்கும் 50 பேர் அடங்கிய ஒரு நிருவாகக்குழுவும் முறை வைத்து நாட்டின் நிருவாகத்துக்குத் தலைமை தாங்கிற்று. ஒவ்வொரு அரசாங்க மாதத்திலும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு தலைவர் அந்த மாத நிருவாகக்குழு உறுப்பினர்களிடமிருந்து, முறை வைத்துத் திருவுளச்சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒருநாள் பொழுதுக்கு நிருவாகக்குழுவின் தலைவராக (Chairman of the Executive Committee)இருந்தார். அப்பொழுது அரசாங்கத் திறவுகோல்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

எக்ளீசியாவினால் முடிவு செய்யப்படவேண்டிய அலுவல்களை இந்த மன்றம் சேர்த்து அனுப்பி, அது செய்யும் தீர்மானங்கள் நிறைவேறும்படி பார்த்துக்கொண்டது. படைகளைப் பராமரித்தல், புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், வறியவருக்கு உதவி, அயல்நாட்டு உறவு ஆகியவற்றைச் செய்தது, இம்மன்றத்தவருக்கும் ஊதியம் அளிக்கப்பட்டது.

3.ஹீலியா என்ற மக்கள் சான்றாளர் நீதிமன்றம்(Heliaea or Popular Jury court):

இதில் 30 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள குடிமக்கள் 6000 பேர் இருந்தனர்.இவர்கள் ஆண்டுதோறும் திருவுளச்சீட்டு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது. ஆகையால் வறியவரும், சோம்பேறிகளும் இந்தப் பதவிக்கு வழி இருந்தது.

இதிலுள்ள 6000 சான்றாளரும் செயல்படவில்லை. இவர்கள் 500 பேர்களடங்கிய 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். எஞ்சிய 1000 பேர் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டனர். இந்த நீதிமன்றம் வழக்கை ஆய்வு செய்யவில்லை. வழக்கைத் தொடுக்கும் வாதி

பிரதிவாதியை நாட்டின் பகைவரென்றும், தான் நாட்டின் உயிர் போன்ற நண்பனென்றும் சொல் வன்மையாலும் எடுத்துக்காட்டினால், அவருக்கு வெற்றி கிடைத்தது. வழக்காடுவோருக்கு உதவியாக ஏற்ற சொற்றொடர்களை அமைத்துப் பேச்சு எழுதிக் கொடுப்போர் பலர்(Speech Writers)) இருந்தனர். எனவே வழக்குகளின் உண்மையையும், அவற்றுக்குப் பொருத்தமான சட்டத்தையும் அடிப்படையாக வைத்து இந்த நீதிமன்றம் தீர்ப்பு வழங்காமல், மக்களின் வெறுப்பு, விருப்புக்களை அடிப்படையாக வைத்துத் தீர்ப்பு வழங்கிற்று. சுதந்திர சிந்தனையாளர் சாக்ரட்டீசுக்குக் கி.மு.399ல் கொலைத்தண்டனை கொடுத்தது இந்த நீதிமன்றந்தான். ०००

(தொடரும்)

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 741116